Stadt Zürich
Schulgesundheitsdienste

Tamilisch

# மழலையர்-பள்ளி நுழைவு - பள்ளி மருத்துவம் மற்றும் பள்ளி உளவியல் ஆகியோரின் கண்ணோட்டத்தில்

**மழலையர்-பள்ளியில் சேர்வது ஒரு குழந்தையின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான படியாகும். ஜூலை 31 ஆம் தேதிக்குள் நான்கு வயது நிரம்பியுள்ள குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவார்கள். குழந்தைகள் வித்தியாசமாகவும் எல்லா விதத்திலும் ஒரே வேகத்தில் அல்லாமலும் வளர்கின்றனர் - மழலையர்-பள்ளியானது அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ அந் நிலையில் அவர்களைச் சந்தித்து, தனிப்பட்ட முறையில் அவர்களை ஊக்குவிக்கிறது**



## படிப்படியாக

வாழ்க்கையின் முதல் ஆண்டுகளில், குழந்தைகள் தற்காலிகமாக குடும்பத்தை விட்டு வெளியேறுவதற்கும் ஆர்வத்துடன் வெளி உலகத்தை எதிர்கொள்வதற்கும் அதிகமதிகமாக நம்பிக்கையைப் பெறுகின்றனர். விளையாட்டுக் குழுக்கள் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் இதற்கு முக்கியமான கற்றல் மற்றும் பயிற்சி பகுதிகளாகும். 4 வயதிற்குள், பெரும்பாலான குழந்தைகள் புதிய மழலையர்-பள்ளி சூழலின் சவால்களுக்குத் தயாராகவும் திறந்த மனப்பான்மையுடன் இருக்கவும் அவற்றில் நன்கு தேர்ச்சி பெறவும் தேவையான உடல், சமுதாய-உணர்ச்சி சம்பந்தப்பட்ட மற்றும் அறிவுசார் அம்சங்களைப் பெறுகிறார்கள்.

## மழலையர் பள்ளியில் ஒரு நல்ல தொடக்கத்திற்கான முன்நிபந்தனைகள்

மழலையர் பள்ளி ஆசிரியரின் வழிகாட்டுதலின் படி , அதே வயதுடைய மற்றும் வயதில் சற்றே மூத்த குழந்தைகள் அடங்கிய ஒரு பெரிய குழுவில் தினமும் காலை முழுவதையும் நேரத்தை செலவிட குழந்தை தயாராக உள்ளது. மழலையர் பள்ளியின் பரிந்துரைகள் இன்னும் படிப்படியாக வயதுக்கு ஏற்றப்படி வளர்ச்சியடைய ஊக்குவிக்கின்றன. வெளியே விளையாடவும் வழிகாட்டப்பட்ட பாடங்களை படிக்கும் போது தனது அனைத்து புலன்களையும் பயன்படுத்தவும் குழந்தைக்கு முடிந்தால், இது வெற்றிகரமாக இருக்கும். இக் காரணத்திற்காக, குழந்தை மருத்துவர் 4 வயது அடைந்த சந்தர்ப்பத்தில் நடத்தும் பரிசோதனையில் குழந்தைக்கு நன்றாக பார்க்கவும் கேட்கவும் முடியுமா அல்லது அவருக்கு கண் பார்வைக் கருவிகள் அல்லது செவியுணர்ச் சாதனங்கள் தேவையா என்பதை சரிபார்க்கிறார்.

மழலையர் பள்ளியின் ஆரம்பம் வெற்றிகரமாக இருக்க, குழந்தைகள் பெரும்பாலும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். **தனிப்பட்ட புள்ளிகள் அல்ல**, **ஆனால் அதற்கு மாறாக**, **வளர்ச்சியை சித்தரித்துக் காட்டும் முழு விபரமும்** மழலையர்-பள்ளிக்கான தயார்நிலைக்கு முக்கியமானதாகும்.

## சரீர பலத்திற்கான முன்நிபந்தனைகள்

- காலை நேரத்தில், மழலையர்--பள்ளிக்குச் செல்லும் குழந்தை விழிப்பாயும் சுறுசுறுப்பாயும் இருப்பார். அதனால் அவர் மழலையர்-பள்ளி திட்டத்தில் தீவிரமாக பங்கேற்க முடியும்.

**தெரிந்து கொள்வது நல்லது:**
**சுற்றுச்சூழலில் உள்ள சலுகைகள் குழந்தையின் வளர்ச்சியின் மட்டத்துடன் பொருந்தும்போது, குழந்தைகள் சிறந்த முறையில் வளர்கிறார்கள் மற்றும் சிறந்த ஊக்கத்தைப் பெற்றும் சவால்கலை எதிர்கொள்ளவும் செய்கின்றனர் என்று இன்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.**

இதற்கு போதுமான நீண்ட மற்றும் இடையூறு இல்லாத தூக்கம் இரவில் தேவைப்படுகிறது.

- குழந்தைக்கு இனி பாட்டிலில் அடைக்கப்பட்ட உணவு தேவைப்படாது, சக்தியைப் புதுப்பித்துக்கொள்வதற்கு அவர் காலை உணவை சாப்பிட்டுக்கொள்வார்.
- அவர்கள் மழலையர்-பள்ளிக்கு நடந்தே செல்ல முடியும்.
- அவர் கொண்டு வந்த இரண்டாவது காலை சிற்றுண்டியை தானே பிரித்து சாப்பிட முடியும்.
- அவர் எப்போது கழிப்பறைக்குச் செல்ல வேண்டும் என்பதை அவர் தெரிந்துக் கொண்டு, சிறிய உதவியின் மூலம் (எ.கா. அவரது கால்சட்டை பொத்தானைத் திறப்பது போன்றது).சுதந்திரமாக கழிப்பறைக்குச் செல்ல இயலும்.
- குழந்தைக்கு அடிப்படை திறன்கள்

மற்றும் ஓடுதல், குதித்தல், படிக்கட்டுகளில் ஏறுதல், மற்றும் படம் வரைதல், வெட்டுதல், கை கழுவுதல், மூக்கை சிந்துதல், உடைகள் மற்றும் காலணிகளை அணிதல் மற்றும் கழற்றுதல் போன்ற ஒரு சில திறமைகள் உள்ளன.

### சமூக மற்றும் உணர்ச்சி சார்ந்த முன்நிபந்தனைகள்

- குழந்தை எவரிகளுடன் உணர்ச்சி ரீதியில் நெருக்கமாக இருக்கிறதோ, அவர்களிடமிருந்து காலை முழுவதும் மழலையர்-பள்ளி பிரிக்க முடியும். இனி ஒரு செயற்கைப் பாற்காம்பு (பாசிபயர்) குழந்தைக்குத் தேவையில்லை.
- தனது தேவைகளை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் குழந்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்.
- மற்ற குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுடன் சரியான தொடர்பை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் குழந்தை செய்கிறது.
- விதிகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்த குழந்தை முயற்சிக்கிறது
- வன்முறையின்றி மோதல்களைத் தீர்க்க முயற்சிக்கிறது.
- தோல்விக்குப் பிறகு மீண்டும் முயற்சிக்கத் துணிகிறது.
- குழந்தை தன்னைத் தானே ஆறுதல்படுத்திக் கொள்ள முடியும்.

### அறிவுசார் முன்நிபந்தனைகள்

- மழலையர்-பள்ளிக்கு செல்லும் குழந்தை யாவற்றையும் கவனிக்கிறது மற்றும் உடற்பயிற்சி விளையாட்டுகள், கைவினைப்பொருட்கள் செய்தல், படங்கள் வரைதல் ஆகியவற்றின் போது வழிமுறைகளை தன்னால் பின்பற்ற முடிகிறது.
- குழந்தை ஆசிரியர்களுக்கு பதிலளிக்கிறார் மற்றும் எளிய பணிகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்த முடியும்.
- அது விளையாடும் போது , நேரத்தை பொழுதுபோக்க முடியும், காத்திருக்கவும் கவனிக்கவும் முடியும்.

### மழலையர் பள்ளியில் ஆரம்ப பள்ளி சேர்க்கை

மழலையர் பள்ளிக்குள் முன்கூட்டியே நுழைவதை சட்டம் அனுமதிக்காது

### மழலையர் பள்ளியில் பிள்ளையை பின்னர் சேர்த்தல்

குழந்தையின் வளர்ச்சியின் நிலை காரணமாக. குழந்தையின் நலனைக் கருதி, பள்ளியில் பின்னர் தாமதமாக சேர்ப்பது அரிதாகவே இருக்கும். ஏனெனில் பொதுவாக, குழந்தை வளர்ச்சியில் விரும்பிய முன்னேற்றம் தானாகவே ஏற்படாது, ஆனால் இலக்கு வைக்கப்பட்ட ஊக்குவிப்பபின் மூலம் மட்டுமே ஆகும். அதாவது, இந்த நேரத்தில் குழந்தைக்கு தனிப்பட்ட ஊக்குவிப்பு தேவை என்பதாகும். மேலும், பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் அதே ஆண்டு மழலையர் பள்ளியில் தங்கள் சக ஊழியர்களை விட ஒரு வயது வரை மூத்தவர்கள், உயரம் மற்றும் வலிமை கொண்டவர்கள், இது பெரும்பாலும் சமூகம் மற்றும் உணர்ச்சிகள் சார்ந்த சிக்கல்களுக்கு வழிவகுக்கிறது. தனிப்பட்ட சந்தர்ப்பங்களில், நிலை மீள்தலுக்கான கோரிக்கை மாவட்ட பாடசாலை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பள்ளி மருத்துவர் அல்லது பள்ளி உளவியலாளரை இரண்டாவது அபிப்பிராயத்திற்காக அழைக்கப் படலாம். சில பள்ளி மாவட்ட பாடசாலை ஆணையங்களில், மருத்துவச் சான்றிதழும் தேவைப்படலாம்.

### மழலையர் பள்ளியில் ஒரு வருடத்தைத் தவிர்த்தல் / மீண்டும் அதே வகுப்பில் படித்தல்

மழலையர் பள்ளி பொதுவாக இரண்டு ஆண்டுகள் நீடிக்கும். அறிவுசார் அல்லது தனிப்பட்ட வளர்ச்சியின் காரணமாக, இது அனுமதிக்கப்படுகிறது / தேவைப்படுகிறது என்றால், சில குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிக்கு மாறுவது விதிவிலக்காக ஒன்று அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும்.

### பள்ளி பராமரிப்பு / பள்ளிக்கூடத்திற்குப் பிறகான கவனிப்பு

பெற்றோர் இல்லாமால், ஒரு பெரிய எல்லா வயதுகளும் கலந்த குழந்தைகளுடன் உணவு சாப்பிடுதல் உட்பட முழு நாளையும் செலவிடுவது மழலையர்-பள்ளி வயது குழந்தைகளுக்கு ஒரு சவாலாக உள்ளது. முந்தைய அனுபவம் மற்றும் தனிப்பட்ட குணத்தைப் பொறுத்து, குழந்தைக்கு இது ஊக்கமளிக்கும் அனுபவமாகவோ அல்லது கடுஞ்சோர்வாக்கும் அனுபவமாகவோ அமையலாம். உங்கள் பிள்ளைக்கு படிப்படியாகப் புதிய கவனிப்பு வடிவத்தை பழகுவதற்கு நேரம் கொடுங்கள்.

### சிறப்பு கல்வி நடவடிக்கைகள்

**சிறப்பு கல்வி நடவடிக்கைகளில் பேச்சு சிகிச்சை, சுகாதார கல்வி ஊக்குவிப்பு அல்லது கருத்தால் தூண்டுதலுற்ற தசையியக்கம் ஆகியவை அடங்கும்.** ஒரு குழந்தைக்கு மழலையர் பள்ளி தொடங்கும் போது சிறப்பு கல்வி நடவடிக்கைகள் தேவைப்பட்டால், பொறுப்பான மாவட்ட பள்ளி அதிகாரத்திடம் மறுஆய்விற்கு விண்ணப்பிக்கலாம். இல்லையெனில், மழலையர் பள்ளி தொடருகையில் , இத் தேவைகளைக்குறித்து பெற்றோருடன் கலந்தாலோசிக்கப்படும்.

.

### பெற்றோர்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் ?

பெற்றோர்கள் தங்கள் குழந்தையை சுதந்திரமாக இருக்க ஊக்குவிக்கும் போதும், அவர்களின் கற்கும் திறனை நம்பும் போதும், அவர்களுக்கு ஆதரவளிக்கிறார்கள். நேர்மறையான அனுபவங்களுடன், மோதல்கள் மற்றும் தோல்விகள் ஆகியவை கற்றல் செயல்முறையின் ஒரு பகுதியாகும் என்பதை குழந்தைக்குத் தெரியப்படுத்துங்கள். ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஆக்கியவற்றைக் குறித்து ஒரு திறந்த மனப்பான்மை இருந்தால், இது குழந்தையின் பள்ளிப் படிப்புக்கு ஒரு முக்கிய ஆதரவாகும்.

### உரையாடல்

உங்களுக்கு ஏதேனும் கோரிக்கை இருந்தால், ஆசிரியரிடம் முன்கூட்டியே பேசுங்கள்.

தேவைகளைப் பொறுத்து, பள்ளி மருத்துவ சேவை அல்லது பள்ளி உளவியல் சேவை, பொறுப்பான மாவட்ட பாடசாலை ஆணையம் அல்லது பிற நிபுணர்கள் (எ.கா. உங்கள் குழந்தை மருத்துவர், சம்பந்தப்பட்ட ஆதரவாளர்கள் அல்லது சிகிச்சையாளர்கள்) அழைக்கப்படலாம்.

தொடர்பு மற்றும் மேலதிக தகவல்கள்:
**Schulgesundheitsdienste der Stadt Zürich (சூரிச் நகரின் பள்ளி சுகாதார சேவைகள்)**
**Schulärztlicher Dienst und Schulpsychologischer Dienst** (பள்ளி மருத்துவ சேவை மற்றும் பள்ளி உளவியல் சேவை) **www.stadt-zuerich.ch/sg**

Stand: 3 / 2024